ஆண்டு பட்டிகை வழக்கு எண்.44 /2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No 44/2026 LW- 1 PW- 1

CC.No.

| | |
|---|---|
| Name | : சதீஸ்குமார் ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : சின்னச்சாமி |
| Village | : கோபால்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2026

(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் மாசாணம் என்பவரை தெரியும். மற்றொரு எதிரியை நான் பார்த்தது இல்லை. கடந்த 22.10.2024ம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு மேல் TN 57 CW 6849 என்ற பதிவெண்கொண்ட எனது பல்சர் இருசக்கர வாகனத்தை என் அண்ணன் வைரமூர்த்தி என்பவர் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கோபால்பட்டிக்கு சென்றுவிட்டு திண்டுக்கல் – நத்தம் சாலையில் நத்தம் நோக்கி இடதுபுறமாக வந்து கொண்டிருந்தபோது, மழை பெய்து சாலையில் தண்ணீர் தேங்கியிருந்ததால் சாலையின் வலதுபுறம் நாங்கள் ஏறி வின்ஸ் கார் கேர் ஒர்க் ஷாப் முன்பாக வந்தபோது எதிர்திசையில் அதிகவேகமாக ஹாரன் அடிக்காமல் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த டிப்பர் லாரி எங்கள்

மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எனது வாகனத்தை ஓட்டி வந்த வைரமூர்த்தி என்பவருக்கு முகம் மற்றும் கை, கால்களில் ரத்தக்காயமும், அதன் பின்னர் பின்னால் வந்த ஆட்டோ அவர் மீது ஏறி இறங்கியதில் அவரது கால்கள் உடைந்துவிட்டது. எனக்கு இடது முழங்காலில் எலும்பு முறிவு காயமும் ஏற்பட்டது.

2. பின்னர் எங்களை அவசர ஊர்தியில் ஏற்றி நத்தம் அரசு மருத்துவமனையில் ரவி என்பவர் சிகிச்சையில் சேர்த்தார். போலீசார் என்னை நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மதியம் 3.00 மணிக்கு விசாரித்தார்கள். அப்போது ரவி என்பவர் சம்பவ இடத்தில் சம்பவத்தை நேரில் பார்த்து எங்களை அவசர ஊர்தியில் அனுப்பிவைத்துவிட்டு விபத்தை ஏற்படுத்திய வாகனங்களின் எண்கள் மற்றும் ஓட்டி வந்த நபர்கள் குறித்த விபரங்களை சொன்னதன் அடிப்படையில் பதிவு எண் மற்றும் எதிரிகளின் பெயர்களை நான் சொல்லச் சொல்ல போலீசார் எழுதினார்கள். பின்னர் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.06.04 15:51:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்